வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=




ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 13.03.2025 வியாழக்கிழமை இதழ் : 73 பக்கங்கள் : 12

# பெண் மருத்துவர் வன்புணர்வு; படை விட்டோடி சிப்பாய் கைது

## திருடிய கைபேசி காட்டிக்கொடுத்தது!

கொழும்பு, மார்ச் 13

**அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்தில் தேடப்பட்டு வந்த படைச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.**

சந்தேகநபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்று கூறப்படுகிறது. இவர், அநுராதபுரம் நகரிலிருந்து சுமார் 45 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கல்னேவ பகுதியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட படை விட்டோடி சிப்பாய் போதைப்பொருள், நகை திருட்டு குற்றம் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமையே தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு, அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் நோயாளர் விடுதியில் தனது கடமைகளை முடித்து விட்டுத் தனது விடுதிக்கு திரும்பியுள்ளார் பெண் மருத்துவர். அவரின் பின்னால் வந்த சந்தேகநபர் கத்தியைக் காட்டி மிரட்டி மருத்துவரின் விடுதி அறைக்குள் கூட்டிச் சென்றுள்ளார்.

பின்னர், மருத்துவரின் கை, கால்களை கட்டி விட்டு அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர், மருத்துவரின் கைபேசியையும் எடுத்துக்

11



## பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் நிர்க்கதி!

கொழும்பு, மார்ச் 13

மருத்துவர்கள் நேற்றுக் காலை முதல் ஆரம்பித்த நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் பல ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த சம்பவத்தை கண்டித்தும் - அவருக்கு நீதி கோரியும் அரச மருத்துவ

11

## குற்ற சந்தேகநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, மார்ச் 13

அநுராதபுரத்தில் பெண் மருத்துவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச் சந்தேகநபருக்கு எதிராக சட்டநவடிக்கை எடுக்கப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## அநுராதபுரம் மருத்துவமனைக்கு சென்ற சுகாதார அமைச்சர் நளிந்த

அநுராதபுரம், மார்ச் 13

அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு நேற்று புதன்கிழமை சென்ற சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அங்கு, மருத்துவமனை நிர்வாகத்துடன் கலந்துரையாடினார்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே சுகதார அமைச்சர் நேற்றுஅங்கு சென்று மருத்துவமனை பணிப்பாளர் மற்றும் மருத்துவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார். (ஐ)

## போதைப் பொருளுக்கு மாற்றாக 150 வகை மருந்துகள் பயன்பாட்டில்!

### அடிமையாகும் இளையோரும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 13

போதைப் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய 150 வகையான பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் பயன்பாடும் அதிகரித்து வருகிறது என்று தேசிய ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாதல் அதிகரித்து வருகிறது என்று மருத்துவ நிபுணர் இந்திகா வன்னிநாயக்க எச்சரித்துள்ளார்.

போதைப் பொருட்களுக்கு மாற்றாக

11

## நாளை வரை மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பு தொடரும்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, மார்ச் 13

மருத்துவர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நாளை வெள்ளிக்கிமை காலை 8 மணி வரை தொடரும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் முன்னாள் சிப்பாய் ஒருவரால் பெண் மருத்துவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். இதனைக் கண்டித்தும் - அவருக்கு நீதி கோரியும் நேற்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் நாடு முழுவதுமுள்ள அரச மருத்துவமனைகளின் மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், சிறுநீரக நோயாளர் மருத்துவமனை, மகப்பேற்று

11


## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பை சேர்ந்த எஸ். பேணார்ட் (வயது -73) என்பவரே நேற்றைய தினம் யாழ். போதனா மருத்துவமனையில்

11



## யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர்களும் வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை உட்பட மாவட்டம் முழுவதுமுள்ள மருத்துவமனைகளின் மருத்துவர்களும் நேற்றைய தினம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

11

## சட்டத்துக்கமைய வேட்புமனு தாக்கலாகாவிடின் நிராகரிப்பு

### தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, மார்ச் 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்துக்கமைய தாக்கல் செய்யப்படாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப் படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதனால், அது தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர்

11

## ராஜிதவுக்கு முக்கியத்துவம் ஐ. தே. கட்சிக்குள் குழப்பம்!

### கோபமடைந்த ரணில்

கொழும்பு, மார்ச் 13

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ராஜிதவுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தால் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான

11

## 20 ஆயிரம் மேலதிக கைதிகளால் சிறைச்சாலைகள் திணறுகின்றன!

### நீதி அமைச்சர் சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 13

நாட்டின் சிறைச்சாலைகள் அதன் கொள்ளளவுக்கும் மேலதிகமாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளால் நிரம்பி வழிகிறது என்று நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் 10 ஆயிரத்து 400 கைதிகளையே தடுத்து வைக்க முடியும். ஆனால், தற்போது சுமார் 30 ஆயிரம் கைதிகள் உள்ளனர். இவர்களில் சுமார் 19 ஆயிரம் பேர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர அபிவிருத்தி அதிகார சபையினரை சந்தித்தார் ஜனாதிபதி அநுர குமார



கொழும்பு, மார்ச் 13

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.**

நகர அபிவிருத்தி அதிகார சபையால் செயல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முன்னுரிமை வழங்க வேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு திறம்பட பயன்படுத்துவது தொடர்பில் ஆராயும் நோக்கத்துடன் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யபட்டது.

முறையான நகர்ப்புற அபிவிருத்தியின் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான சாத்தியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நகர அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தும் போது பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பௌதிக அடிப்படையில் ஒருங்கிணைந்த திட்டங்களை தயாரிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நகர திட்டங்களை ஒன்லைனில் அங்கீகரிப்பதற்கான திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதோடு அதற்காக தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

நாடு முழுவதும் 119 நகரங்களுக்கான நகர அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அந்தத் திட்டங்களை விரைவாக செயல்படுத்துவது மற்றும் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

நகர திட்டமிடல், மூலதன முதலீடுகள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல், நகர காணிப் பயன்பாட்டுக் கொள்கையை தயாரித்து செயல்படுத்துதல், புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல், நிறைவு செய்வதற்குத் தவறியதால் புறக்கணிக்கப்பட்ட எந்தவொரு அபிவிருத்திப் பணியையும் பொறுப் பேற்று நிறைவு செய்தல், மூல தன அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல், சுற்றுச் சூழல் தர நிலைகளைத் தயாரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தயாரித்தல், கட்டிட பொறியியல் மற்றும் ஏனைய செயல்பாடுகளை மேற்கொள்வது மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாகவும் இதன் போது மீளாய்வு செய்யப்பட்டது. (ஐ)

# கொக்குவில் வாள்வெட்டு; இளைஞர்கள் நால்வர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 13

கொக்குவிலில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் 4 பேரை கைது செய்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி கொக்குவில் ஞானபண்டித பாடசாலை அருகில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் ஒருவரின் கைவிரல் துண்டானது. யாழ். போதனா மருத்துவமனையில் துண்டான விரல் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் நேற்று மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள்கள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேநேரம், இந்தச் சம்பவம் தொடர்பில் இன்னொரு நபர் தனது சட்டத்தரணி மூலம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இரண்டு வாள்கள் 2 மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

# வன்முறை குற்றவாளிக்கு 3 மாத சிறைத் தண்டனை!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணத்தில் வன்முறைகளில் ஈடுபட்டார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவருக்கு 3 மாதங்கள் கட்டாய சிறைத் தண்டனையும் 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த 16 மாத சிறைத் தண்டனையும் விதித்துள்ளது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

2022ஆம் ஆண்டில், குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் தேடி வந்த நிலையில், சந்தேகநபர் உரும்பிராயில் மறைந்திருக்கிறார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை கைது செய்யச் சென்றனர்.

கூரிய ஆயுதங்களை காட்டி சந்தேகநபர் பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்த நிலையில், சந்தேகநபர் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபருக்கு நேற்று முன்தினம் தீர்ப்பை வழங்கினார். அதில், பொலிஸாரை மிரட்டி தப்பிச் சென்ற குற்றத்துக்கு 3 மாதங்கள் கட்டாய சிறைத்தண்டனையும் ஏனைய குற்றங்களுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த 16 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (ஐ)

# வாகன எரிபொருள் மோசடி; அங்கஜன் மீதும் விசாரணை

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ குழுக்களின் முன்னாள் துணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கு எதிராக விசாரணையை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

தங்களின் பதவிக் காலத்தில் அதிகமாக எரிபொருள் பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் மீது விசாரணையை தொடர்வது தொடர்பில் ஆராயுமாறு சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

"முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஜனவரி 1, 2024 முதல் 9 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். மேலும் எரிபொருளுக்காக 3 கோடியே 30 இலட்சம் ரூபாயை செலவிட்டுள்ளார்.

துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ 2024இல் 6 வாகனங்களை பயன்படுத்தியுள்ளார். இதற்கான எரிபொருள் செலவு ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாயாகும்.

அப்போதைய குழுக்களின் துணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் 2024 இல் எரிபொருளுக்காக 4 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். அவர் மூலம் 70 இலட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்பட் டுள்ளது என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

வடமராட்சி, மார்ச் 13

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் "மக்களின் எதிர்பார்ப்பும் 2025ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டமும்" என்னும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

# மன்னாரில் தமிழ் அரசு கட்டுப்பணம்

மன்னார், மார்ச் 13

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்று புதன்கிழமை கட்டுப் பணம் செலுத்தியது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான குழுவினர் மன்னார் மாவட்ட தேர்தல் பணி மனையில் கட்டுப் பணத்தை செலுத்தினர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. (ஐ)

# புதுக்குடியிருப்பில் விபத்து இளைஞர்கள் இருவர் காயம்

முல்லைத்தீவு, மார்ச் 13

புதுக்குடியிருப்பில் மோட்டார் சைக்கிளும் கெப் ரக வாகனமும் மோதுண்ட விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

நேற்று புதன்கிழமை மதியம் 12. 30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தின் முன்பாக பேருந்து தரிப்பிடத்தில் நின்ற பேருந்தை முந்திச் செல்ல முயன்றது.

அப்போது எதிரே வந்த கெப் ரக வாகனத்துடன் மோதுண்டது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் காயமடைந்து புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அநுராதபுரம் மருத்துவமனை முன்பாக நேற்று போராட்டம்





கொழும்பு, மார்ச் 13

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது மருத்துவமனையில் பணிபுரியும் பெண் மருத்துவர் மீதான பாலியல் வன்புணர்வை கண்டித்தும் - அவருக்கு நீதி கோரியும் - அனைத்து ஊழியர்களின் பாதுகாப்பையும் வலியுறுத்தி இந்தப் போராட்டம் நேற்று புதன்கிழமை மருத்துவமனை முன்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.03.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கொல்லப்பட்ட ஜே.வி.பியினருக்கான நீதி

வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலைத் தெர்டர்ந்து நீண்டகாலமாக மறக்கப்பட்டிருந்த பட்டலந்த வீடமைப்பு திட்டத்துக்குள் இயங்கியதாகக் கூறப்படும் இரகசிய சித்திரவதை முகாம் தொடர்பான விடயம் மீண்டும் இலங்கை அரசியலில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. ஜே. வி. பியின் இரண்டாவது கிளர்ச்சியின்போது 1989 - 1990 வரையான காலப்பகுதியில் சுமார் 40 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரையிலான ஜே.வி.பியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இவ்வாறு கடத்தப்பட்டவர்களை சித்திரவதை செய்யும் - பின்னர் கொலை செய்யும் கெலைக் களமாக இந்த பட்டலந்த முகாமே இருந்ததாகக் கூறப்படுகிறது.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் - 1995இல் இது தொடர்பில் விசாரிப்பதற்காக ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டது. இது தொடர்பான விசாரணை அறிக்கையும் 1998 இல் சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த வீடமைப்புப் பகுதி இரகசியமாகத் தடுத்து வைக்கும் பகுதியாக இருந்ததாகவும் அங்கு பலர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனரெனவும் குறித்த ஆணைக்குழு குறிப்பிட்டது.

இந்த சம்பவங்கள் இடம்பெற்றபோது ரணில் விக்கிரமசிங்க பிரேமதாஸ அரசாங்கத்தில் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தார். இந்தப் படுகொலைகள் ரணில் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையில் இடம்பெற்றதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், பின்னர் வழமைபோல் அந்த விசாரணை அறிக்கை குப்பைத் தொட்டிக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இலங்கையில் இவ்வாறான விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் எந்தவொரு விசாரணையும் இடம்பெற்றதாக வரலாறு இல்லை.

ஆனால், இப்போதுள்ள அடிப்படையான வேறுபாடு - அன்று கொல்லப்பட்டவர்களின் தோழர்களாக அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாக இருக்கிறார். தேசிய மக்கள் சக்தி என்னும் பெயரில் அரசாங்கம் இருந்தாலும்கூட, ஜே.வி.பியே அதன் நிழல் சக்தியாக இருக்கிறது. ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சக்திவாய்ந்த நபராக இருக்கிறார். அவர் ஒரு நேர்காணலில் கூறுகிறார் , "ஒரு பகுதிதான் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறது - ஜே. வி.பியில் வெளியில் தெரியாத ஒரு பகுதி உண்டு. அவர்கள் அதிகாரத்தில் அங்கம் வகிப்பதில்லை. அரசாங்கம் என்பது வேறு விடயம் ஜே.வி.பி. அடிப்படையில் ஓர் அரசியல் பேரியக்கம்."

அது உண்மையானால் - இப்போது இலங்கையின் பாராளுமன்றத்தை அரிதான பெரும்பான்மையால் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் ஜே. வி. பியானது, அதனை நம்பி உயிர்களை இழந்தவர்களுக்கு நீதி கிடைப்பதற்காகத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்துமா அல்லது, ஏனைய அரசாங்கங்கள் போன்று ஆணைக்குழுக்களை நியமிப்பதுடன் அறிக்கைகளை வெளியிடுவதுடன் கலைந்து சென்றுவிடுமா? ஜே.வி.பியின் ஒரு காலத்தின் கருத்தியலை நம்பி உயிர்களைக் கொடுத்தவர்களை இன்றைய ஜே. வி. பி. நினைவில் வைத்திருக்குமா - அவர்களை கௌரவப்படுத்துமா?

பட்டலந்த ஜே.வி.பி. படுகொலை விவகாரம் முன்வைக்கும் பிரதான கேள்வி இதுதான்.

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

*கொழும்பு, மார்ச் 13*

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை மாவட்ட வாரியாக வெவ்வேறு கடித உறைகளில் மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு நேரில் சென்று ஒப்படைப்பது மிகவும் உகந்தது எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலதிக விவரங்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.election.gov.lkயை பார்வையிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(ஐ)

## ஜ.த.தே. கூட்டணி சார்பில் வவுனியாவில் கட்டுப்பணம்

*வவுனியா, மார்ச் 13*

வவுனியா மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வவுனியாவின் 4 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்காகவே கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

கட்டுப்பணம் செலுத்திய போது அந்தக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் செ. மயூரன், புளொட் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சந்திர குலசிங்கம், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் முக்கியஸ்தர் மோசஸ், ரெலோ அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் சந்திர பத்மன் ஆகியோர் உடனிருந்தனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியி டும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-10)

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது குறித்து கிளிநொச்சியில் உரையாடல்

*கிளிநொச்சி, மார்ச் 13*

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது, அதிலிருந்து மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்பும் திட்ட கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது.

காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை மாற்றத்துக்கு முகங்கொடுக்கும் முகமாக சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், கிறிஸலிஸ் நிறுவனம், வறுமை பகுப்பாய்வு நிலையம் ஆகிய இணைந்து செயல்படுத்திய திட்டங்களின் மாகாணம் தழுவிய கலந்துரையாடலாக கிளிநொச்சியில் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்திய சமூக செயல்பாட்டுத் திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன. அத்துடன், இவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.




இந்தக் கலந்துரையாடலில் நிபுணர் குழுக் கலந்துரையாடல், பயனாளிகளின் கருத்துக்கள், அரச அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

மேலும், வடக்கு மாகாணத்தில் காலநிலை மாற்றம், குடிதண்ணீர் மற்றும் உணவு பாதுகாப்பு தரவுகளும் அவற்றின் மாறுபாட்டு நிலையும் தொடர்பில் விளக்கக் காட்சியும் நிகழ்த்தப்பட்டது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். மனதிற்கு இதமான செய்தி வரும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் பனிப்போர் வந்து நீங்கும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**விருச்சிகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் போராடி முடிக்க வேண்டி வரும். அக்கம் பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப்போங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கும்பம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக் கட்டும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அமோகமான நாள்.


### பெண் மருத்துவர் வன்புணர்வு:

# வவுனியா மருத்துவமனையின் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, மார்ச் 13

வவுனியா பொது மருத்துவமனையின் மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவர் ஒருவர் கத்திமுனையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் - மருத்துவருக்கு நீதி கோரியும் நேற்று நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.



இதற்கு ஆதரவு தெரிவித்தே நேற்றைய தினம் வவுனியா பொது மருத்துவமனையின் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (ஐ-10)

# வன்னேரிக்குள சுற்றுலா தளம் கைவிடப்பட்ட நிலையில்!

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி வன்னேரிக்குளத்திலுள்ள சுற்றுலா மையம் பயன்பாடற்று காணப்படுவதாக மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக்குளத்தில் கடந்த 2017ம் ஆண்டு வடக்கு மாகாண சபையால் சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் பயன்பாடற்று காணப்படுகின்றது.

இந்த சுற்றுலா மையத்தை சம்பந்தப்பட்ட திணைக்களம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அதனை செயல்படுத்தக்கூடிய வேறு அமைப்புகளிடமாவது கையளிக்க வேண்டுமெனவும் பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

# விழிப்புணர்வு நடைபயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

உலக கண் அழுத்த நோய் வாரத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நகரில் விழிப்புணர்வு நடைபயணம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணை சிவன் ஆலயத்தில் இருந்து எஸ். ரி. எஸ். மருத்துவமனை வரை நடைபெறும் இந்த விழிப்புணர்வு நடைபயணத்தை நல்லூர் லயன்ஸ் கழகமும் எஸ். ரி. எஸ். மருத்துவமனையும் இணைந்து நடத்துகின்றன. (ஐ)

# கிளிநொச்சி குளத்தில் சுற்றுலா மையம் திறப்பு



கிளிநொச்சி, மார்ச் 13

சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் விதத்தில் கிளிநொச்சி குளத்தை அருகே சுற்றுலா மையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் இந்த சுற்றுலா மையத்தை திறந்து வைத்தார்.

பாரம்பரிய உணவுகள், இயற்கை குளிர்பானங்கள் விசைப்படகு, துடுப்பு படகு சவாரிகளுடன் இந்த சுற்றுலா மையம் அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபால், கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன், வைத்தியர்கள், அரச அதிகாரிகள், தொழிலதிபர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

கிழக்கு பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் முன்னை நாள் தலைவரும் கலைஞரும் எழுத்தாளருமான பேராசிரியர் பால. சுகுமாரின் படைப்புகளும் தொகுப்புகளும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் சுழிபுரத்தில் அமைந்துள்ள கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி ந. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் உரைகளை தமிழக பேராசிரியர் இரா. பிரபாகர், ஆய்வாளர் சி. விமலன் ஆகியோர் ஆற்றுவர். விசேட உரையை பேராசிரியர் பால.சுகுமார் ஆற்றுவார்.

தொடர்ந்து சபையோரின் கருத்துரைகள் இடம்பெறும்.

# யாழ்ப்பாணத்தில் கட்டுப்பணம் செலுத்தியது த. தே. ம. முன்னணி!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தின் ஒரு மாநகர சபை மற்றும் 16 மாநகர சபைகளிலும் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதற்கான கட்டுப்பணத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் யாழ். தேர்தல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை காலை செலுத்தினார்.



இதேபோன்று வடக்கு, கிழக்கு முழுவதும் சைக்கிள் சின்னத்தில் தமது கட்சி போட்டியிடவுள்ளதாகவும் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் கஜேந்திரன் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் திணைக்கள அதிகாரிகள் மீது அரச கணக்குகள் பற்றிய குழு அதிருப்தி!

## விசாரணையின்போது திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 13

**மோட்டார் வாகனத் திணைக்களம் தேவையான கருத்துகளை முன்வைப்பதற்கு உரிய தயார்ப்படுத்தல்களுடன் வராமை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.**

இதற்கு அமைய மீண்டுமொரு தினத்திற்கு உரிய தயார்ப்படுத்தல்களுடன் வருமாறு கூறி அதிகாரிகள் திருப்பியனுப்பப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

மோட்டார் வாகனத் திணைக்களத்தின் 2020, 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து கலந்துரையாடுவதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தலைமையில் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் கூடியபோதே அதிகாரிகள் இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டனர்.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடந்தகாலக் கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்பட்டமை குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

குறிப்பாக இலங்கை சுங்கத்தின் கணினிக் கட்டமைப்புடன் இணைந்து கொள்வதற்கு முன்னர், இடம்பெற்ற சட்டவிரோத வாகனப் பதிவுகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்ட 25 விடயங்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட தற்போதைய நிலைமைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதும், அவ்வாறான அறிக்கையொதுவும் சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

எனினும், அறிக்கையைத் தாம் வழங்கியிருப்பதாக அதிகாரிகள் கூறியபோதும், அவ்வாறான அறிக்கை தமக்குக் கிடைக்கவில்லையென கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். வழங்கப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கையின் பிரதி குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைப் பரிசீலித்த கணக்காய்வாளர் நாயகம் அது குறித்துத் தான் திருப்தியடையவில்லையென குழுவில் தெரிவித்தார். அதிலுள்ள விடயங்கள் குறித்து குழு நீண்ட நேரம் கேள்விகளைக் கேட்டபோதும், அதிகாரிகளால் அவற்றுக்குப் பதிலளிக்க முடியவில்லை. பழைய தகவல்கள் தம்மிடம் இல்லையென்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்திய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, விசாரணைகளை இடைநடுவில் நிறுத்தியதுடன், பிறிதொரு தினத்தில் மீண்டும் அழைப்பதற்குத் தீர்மானித்தது. இக்கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்களான பிரதிய மைச்சர் அருண ஜயசேகர, சுகத் திலகரத்ன, பாராளுமன்ற உறுப் பினர்களான சந்தன சூரியாராச்சி, சட்டத்தரணி சாகரிகா அதாவுட, ஒஷானி உமங்கா, சுசந்த குமார நவரட்ண, ஜனக சேனாரத்ன, தினிந்து சமன் மற்றும் லால் பிரேமநாத் ஆகியோரும், அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர் (அ)

# மீண்டும் அரசியலுக்கு வர லொஹான் ரத்வத்த முடிவு!



கொழும்பு, மார்ச் 13

கண்டி மக்கள் சார்பாக பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து மீண்டும் அரசியலில் பிரவேசிக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மஹய்யாவ பிரதேசத்தில் அவருடைய வீட்டில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் தான் போட்டியிடவில்லை எனவும், பல துரதிஷ்டவசமான சம்பவங்கள் காரணமாக சுமார் மூன்று மாதங்களாக தனது கட்சி அலுவலகம் மூடப்பட வேண்டியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி சார்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டு பொறுப்பு வழங்கப்பட்டால் அதனை ஏற்கத் தான் தயாராக உள்ளதாகவும், திசைகாட்டி அரசாங்கம் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும் அவை நிறைவேற்றப்படுவதாக தெரியவில்லை எனவும் அவர் கூறினார்.

மக்களுக்காக கண்டி மாவட்டத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்கவும் தயாராக இருப்பதாகக் கூறிய அவர், கண்டிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கையின் தலைமைப் பொறுப்பை வழங்கினால் அதனையும் ஏற்க தயாராக இருப்பதாகவும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சியின் வெற்றிக்காக பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனுருத்த ரத்வத்தவின் அரசியல் பயணத்தின் மூலம் மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்வதே தனது நம்பிக்கை என்றும், அதிகாரத்தைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டவில்லை என்றும், கண்டி மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் தான் அக்கறை கொண்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# அரசியல் செயல்பாட்டிலிருந்து முற்றாக விலகியுள்ளார் பஸில்

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தற்போது பொதுஜன பெரமுனவின் அரசியல் நடவடிக்கைகளில் இருந்து முழுமையாக விலகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டி. வி. சானக தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதனால், கட்சியின் ஒழுங்கமைப்பு செயல்பாடுகளை, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் தற்பொழுது முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஒழுங்கமைப்புச் செயல்பாடுகளில் பஸில் ராஜபக்ஷ ஈடுபடமாட்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் தங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# இலஞ்சம் பெற முயன்றவர் கைது!

கொழும்பு, மார்ச் 13

ஹற்றனில் இலஞ்சம் பெற முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் ஹற்றன் நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வருகை தந்த சந்தேகநபர்களிடம் அவர் இலஞ்சம் பெற முயன்றாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெண்ணை மரத்தில் கட்டிவைத்து தாக்கினர் கூட்டுறவு அதிகாரிகள்!

கொழும்பு, மார்ச் 13

சிலாபம் - பங்கதெனிய பகுதியில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரை கூட்டுறவு அதிகாரிகள் மரத்தில் கட்டி வைத்து தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான அவர் தற்போது சிகிச்சைக்காக சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த பெண், பங்கதெனிய சந்தியில் உள்ள ஒரு தனியார் கட்டடத்துக்குப் பின்னால் ஒரு சமையலறையை கட்டி பல ஆண்டுகளாக சிறு வியாபாரமொன்றை மேற்கொண்டு வருகிறார்.

அந்தக் கட்டடம் அண்மையில் சிலாபம் பல்வேறு சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தால் வாங்கப்பட்டதாக உள்ளூர் வாசிகள் தெரிவிக்கின்றனர். கூட்டுறவுக் கட்டடத்துடன் கூடிய நிலத்தை வாங்கியபோதிலும், அந்த பெண் குறித்த இடத்தை விட்டு நகரவில்லை.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடலைத் தொடர்ந்து, சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் மற்றும் பிற ஊழியர்கள் குழு சம்பவ இடத்திற்குச் சென்று, அந்தப் பெண்ணை ஒரு கம்பத்தில் கட்டி வைத்து தாக்கியதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் தமது கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை வலுக்கட்டாயமாக கையகப்படுத்த முயற்சித்தபோதிலும், எந்தத் தாக்குதலும் நடக்கவில்லை என சிலாபம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சரத் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் வனவிலங்குகள் குறித்து எவ்வித கணக்கெடுப்பும் நடக்கவில்லை!

## அமைச்சர் கே.டி.லால்காந்த

கொழும்பு, மார்ச் 13

இலங்கையின் வனவிலங்குகள் தொடர்பாக இதுவரை எந்த விதமான கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை என்று விவசாய, வனவிலங்குகள், மற்றும் கால்நடைகள் அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

வன விலங்குகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படாமை நாட்டுக்கு வெட்கக்கேடான விடயம் என அவர் குறிப்பிட்டார்.



இந்த மாதம் 15ஆம் திகதி நடத்தப்படவுள்ள விலங்குகளின் கணக்கெடுப்பில் குறைகள் இருக்கக்கூடும்.

ஆனால் அதனுடன் நிறுத்தாமல் தொடர்ச்சியாக முன்னேற்றம் செய்வது முக்கியமானது என சுட்டிக்காட்டினார்.

"ஒரே தடவையில் விமானங்கள் தயாரிக்கப்படவில்லை. மனிதர்கள் முதலில் மரங்களின் மேலே ஏறினார்கள், மலையின் உச்சியை நோக்கிச் சென்று முயற்சி செய்தார்கள்.

அதே போன்று, இந்த கணக்கெடுப்பு வளர்ச்சியுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்," எனவும் அமைச்சர் லால்காந்த தெரிவித்தார். (அ)

# அறகலயவில் வீடுகளுக்கு சேதம் எனக் கூறி பெறப்பட்ட இழப்பீடு குறித்து மனு தாக்கல்!

கொழும்பு, மார்ச் 13

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரகலய மக்கள் போராட்டத்தின்போது வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டதாக கூறி பெறப்பட்ட இழப்பீட்டுத் தொகைகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளுமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

பொய்யான தகவல்கள் மூலம் பெறப்பட்ட எந்தவொரு நிதியையும் திரும்பப் பெற உத்தரவிடுமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. சமூக ஆர்வலரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான ரவீந்திரநாத் தாபரே இந்த மனுவை தாக்கல் செய்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, முன்னாள் இராணு வத் தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற் றும் தற்போதைய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால உள்ளிட்ட 15 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப் பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு அரகலய போராட்டத்தின்போது சொத்து இழப்பு மற்றும் சேதத்துக்கு இழப்பீடு பெற்ற 43 முன்னாள் அரசாங்க உறுப்பினர்களின் பட்டியலை அண்மையில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். இதன்படி, முன்னாள் அரச உறுப்பினர்கள் மொத்த மாக 1.224 பில்லியன் ரூபா இழப்பீடு கோரியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பெண் அரசியல்வாதி ஒருவருக்கு நியூசிலாந்து அடைக்கலம்

## மரண அச்சுறுத்தல், பாலியல் தொந்தரவு காரணம்

கொழும்பு, மார்ச் 13

**இலங்கையில் அரசியலில் ஈடுபட்ட- பெண் என்பதால் புறக்கணிக்கப்பட்ட ஒருவர் மரண அச்சுறுத்தல் மற்றும் பாலியல் தொந்தரவு காரணமாக நியூசிலாந்தில் தஞ்சமடைந்துள்ளமை தீர்ப்பாயமொன்றின் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.**

இலங்கையின் 32 வயதுப் பெண் அரசியல்வாதியொருவருக்கு நியூசிலாந்து அடைக்கலமளித்துள்ளது.

முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகாக்கள் அந்தப் பெண் தனது அரசியல் வாழ்க்கையை தொடர்வதற்காக அவருடன் பாலியல் உறவில் ஈடுபடவேண்டும், என தெரிவித்தனர். அந்த பெண்ணின் நண்பர் ஒருவர் இதனை சமூக ஊடகத்தில் பதிவிட்ட பின்னர் அவரை பழிவாங்க முயல்கின்றனர் என்பது தீர்ப்பாயத்தின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட அரசியல்வாதி 2020 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்.

குறிப்பிட்ட பெண் அரசியல்வாதியின் உறவினர் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்தை தொடர்ந்து அவரது இறுதிச் சடங்கில் பிரேதப்பட்டிக்கு அருகில் அடுத்ததாக அவர் கொல்லப்படுவார் என்ற குறிப்பு காணப்பட்டது.

அந்த பெண் அரசியல்வாதிக்கு இரண்டு முறை மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அவரை நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாக வந்தது.

2018 பொதுத்தேர்தலுக்கு முன்னர் அவர் அரசியலில் இருந்து விலகவேண்டும் என எச்சரித்தனர். தனது வீட்டுக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர் என இலங்கையை சேர்ந்த அந்த பெண் குடிவரவு தீர்ப்பாயத்திடம் தெரிவித்தார்.

இலங்கையில் அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் அதிகரிக்கின்றன என தகவல்கள் கிடைப்பதாக நியூசிலாந்தின் தீர்ப்பாயம் தெரிவித்தது.

"உயிர் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையில் தான் மீண்டும் அரசியலில் ஈடுபடமாட்டேன் என அந்த பெண் தெரிவித்தார். அரசியலில் ஈடுபட நினைத்ததே எனது வாழ்க்கையின் மிக மோசமான தீர்மானம். நான் என்னை இழந்தேன். தோல்வியடைந்தது மாதிரி உணர்கின்றேன்" என அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு தான் திரும்பிச் சென்றால் அந்த அரசியல்வாதி தன்னைக் கொலை செய்வார். தனது அரசியல்வாழ்க்கையை அழித்தமைக்காக பழிவாங்குவார் என அவர் கருதுகின்றார்.

2022 இல் தனது பெற்றோரின் வீடு தீக்கிரையானது என தெரிவித்துள்ள அவர், அவ்வேளை நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்தி இதனை செய்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார் என நியூசிலாந்தின் தீர்ப்பாயம் கூறியுள்ளது. (அ)

# தென்னக்கோனை தேடி சாகல வீட்டில் சோதனை!

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைத் தேடி, மாத்தறை மொரவக்க பகுதியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுக்குச் சொந்தமான வீட்டில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் சோதனை நடத்தினர்.

இது தொடர்பில் கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க, குறித்த வீட்டைப் பரிசோதிக்க தம்மிடம் அனுமதி கோரப்பட்டதாகவும், அதற்குத் தாம் அனுமதி வழங்கியதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கண்டவுடன் கைது செய்யுமாறு அறிவித்து அவருக்கு எதிராக மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று முன் தினம் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு இணங்க இந்த உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது. (அ)

# மாணவனை தாக்கிய தனியார் வகுப்பு ஆசிரியருக்கு வெளிநாடு செல்ல தடை!

கொழும்பு, மார்ச் 13

தனது பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்ற மாணவர்களைத் தாக்கிய தனியார் வகுப்பு ஆசிரியரின் விசாரணைக்கு உதவ விரும்பும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் தெரிவிக்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

1929 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்க முடியும் என அதிகார சபை தெரிவித்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியருக்கு வெளிநாட்டு பயணத் தடையும் நேற்று முன் தினம் விதிக்கப்பட்டது.

குறித்த ஆசிரியர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனிப்பட்ட விடயம் தொடர்பில் வெளிநாடு சென்றுள்ளதாகவும், எதிர்வரும் 19 ஆம் திகதி அதிகார சபை முன் முன்னிலைப்படுத்தப் படுவார் என்றும் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். (அ)

# வலம்புரிச் சங்குடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, மார்ச் 13

அநுராதபுரம் - கெக்கிராவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூரியகம பிரதேசத்தில் வலம்புரிச் சங்குடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்புள்ளை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கெக்கிராவ பிரதேசத்தில் வசிக்கும் 34 மற்றும் 39 வயதுடையவர்கள் ஆவர்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கணேவல்பொல வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# தொழில் கோரும் பட்டதாரிகளின் தீர்வு தொடர்பில் அரசு அவதானம்

கொழும்பு, மார்ச் 13

தொழில் கோரும் பட்டதாரிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு மாத்திரமின்றி ஏனைய சில அமைச்சுகளிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டுக் கலந்துரையாடி நிரந்தர தீர்வினை முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாதீடு தொடர்பான குழுநிலை விவாதம் நிறைவடைவதற்குள் இந்த விடயம் தொடர்பில் மேலதிக தகவல்கள் வழங்கப்படும்.

தொழில் கோரும் பட்டதாரிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகிறது.

இது ஒரு தேசிய பிரச்னையாகக் காணப்படுகின்றபோதிலும் அவசரமாகத் தீர்வுகளை முன்வைக்க முடியாது.

கடந்த அரசாங்கத்தினால் இந்த பிரச்னைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படாத மையினாலேயே இந்த விடயம் தொடர்பில் தற்போது ஆராய வேண்டியுள்ளது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளுடன் மூவர் கைது!

கொழும்பு, மார்ச் 13

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வந்த சுங்க அதிகாரி ஒருவர் மற்றும் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையானது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் கம்பளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சிகரெட்டுகளை கொண்டு வந்த சுங்க அதிகாரி மற்றும் அவரது உதவியாளர்கள் இருவரும் டுபாயிலிருந்து விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், சுங்க அதிகாரி தனது அதிகாரபூர்வ அடையாள அட்டையை காண்பித்து விமான நிலையத்துக்குள் நுழைந்து, விமான நிலையத்திலிருந்து சிகரெட்டுகளை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

சுமார் 09 இலட்சம் ரூபா மதிப்புடைய வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 60,000 சிகரெட்டுகள் அடங்கிய 300 சிகரெட் கார்ட்டூன்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 05 பயணப் பைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், கைது செய்யப்பட்ட மூன்று சந்தேநபர்களும் கொண்டு வந்த சிகரெட்டுகளை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தல், கடத்தல் மற்றும் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். (அ)

# குறைந்த செலவில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறிப் பணம் மோசடி!

## பெண் ஒருவர் கொழும்பில் சிக்கினார்

கொழும்பு, மார்ச் 13

வெளிநாடுகளுக்கு மலிவான விமான ரிக்கெற்றுகளை வழங்குவதாகக் கூறி பல்வேறு நபர்களிடம் கோடிக்கணக்கான ரூபாய்களை மோசடி செய்த பெண் ஒருவரை கொழும்பு மோசடி புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.

புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த 2 முறைப்பாடு தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான ரிக்கெற்றுகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்து முறைப்பாட்டாளர்களிடம் பணம் பெற்ற இந்தப் பெண், நீண்ட காலமாக அவர்களைத் தவிர்த்து வந்துள்ளதாக கொழும்பு மோசடி புலனாய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பண மோசடி

சந்தேக நபரான பெண் தங்களிடம் இருந்து 6.5 மில்லியன் ரூபாய் மோசடி செய்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# கடற்படைத் தளபதியை சந்தித்தார் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதர்

கொழும்பு, மார்ச் 13

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பஹீம்-உல்-அஜீஸ் நேற்று முன் தினம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொடவைச் சந்தித்தார்.

கடற்படைத் தலைமையகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

26 ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொடவுக்கு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு உள்ளிட்ட இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. வியூகத்தை தோற்கடித்ததால் ரணிலை குறிவைக்கிறது மேற்குலகு!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

**அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய இடம்பெற்ற அறகலய போராட்டத்தை தோற்கடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தாலேயே அவரை மேற்குலகம் தற்போது குறிவைத்துள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அல்ஜசீரா தொலைக்காட்சி நேர்காணல் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பட்டலந்த முகாம் தொடர்பில் 1989 ஆம் ஆண்டிலேயே ரணில் விக்கிரமசிங்க மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதன்பின்னர் பல தடவைகள் அவர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார். சர்வதேச ஊடகங்கள் முன்னிலையில் கதைத்துள்ளார். எனினும், மேற்படி விடயம் தொடர்பில் அவரிடம் எவரும் கேள்வி எழுப்பவில்லை.

2022 ஆம் ஆண்டு அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட அறகலயவை தோற்கடிப்பதற்கு, பிரதமராக பதவியேற்ற பிறகு ரணில்



நடவடிக்கை எடுத்தார். அதனால்தான் மேற்குலக நாடுகளுக்கு சார்பான தலைவராக இருந்தவர் எனக் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தற்போது எதிரியாக பார்க்கப்படுகின்றது. பட்டலந்த முகாமும் நினைவுக்கு வந்துள்ளது-என்றார்.

(அ)

# வெளிநாட்டு நிறுவனங்களால் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்!

## பிரதமர் அலுவலகம் விசேட அறிக்கை

கொழும்பு, மார்ச் 13

கிரிப்டோ பண வணிகம் என்ற மோசடி விளம்பரங்கள் சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு, வெளிநாட்டு நிறுவனங்களால் இந்த நாட்டு மக்கள் ஏமாற்றப்படுவதாக தெரிவித்து பிரதமர் அலுவலகம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிற பிரபல இலங்கை பிரமுகர்களின் பெயர்களைப் பயன்படுத்தி இந்த மோசடியான விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபலமானவர்கள் மீதான மக்களின் நல்லெண்ணத்தைச் சிதைத்து, அவர்கள் மீதான நம்பிக்கையை உடைப்பதற்கு மக்களை திசை திருப்புவதே இந்த விளம்பரங்களின் முக்கிய நோக்கமாக உள்ளது.

லிதுவேனியாவிலிருந்து இயங்கும் இந்த மோசடி கணக்குகள் மூலம், பிரசாரங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரச அதிகாரிகள் மற்றும் பிரபலமானவர்களின் அங்கீகாரம் உள்ளதாக பொய்யாகக் கூறும், கிரிப்டோ பண முதலீடுகளை விளம்பரப்படுத்தும் ஒன்லைன் விளம்பரங்களிடம் இருந்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(அ)

# விமானப்படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிக்கவேண்டும்!

## சிறிநேசன் எம்.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 13.

யுத்த காலத்தில் மட்டக்களப்பு விமான நிலையத்தை அண்மித்து கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்குப் பதிலாக வழங்கப்பட்ட காணிகளுக்கு இதுவரை ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் ஒத்திவைப்பு வேளை பிரேரணை முன்வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் விமானப்படையினரின் வசமுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை குறித்த பிரேரணையை வழிமொழிந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், குறித்த காணிகள் விடுவிக்கப்படுவது கட்டாயமான விடயமாகும் என தெரிவித்தார்.

இதனையடுத்து கருத்துரைத்த வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, குறித்த காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கமும் உள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் அங்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான காணி ஆவணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

(அ)

# தோட்ட மக்களுக்கான சுகாதாரம், கல்வி வசதிகள் தொடர்பில் விசேட அவதானம்!

கொழும்பு, மார்ச் 13

பெருந்தோட்ட மக்களுக்கான சுகாதாரம், கல்வி உள்ளிட்ட வசதிகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேயிலை ஏலத்தில் உரிய விலை கிடைக்கவில்லை எனக் கூறுகின்ற பெருந்தோட்ட நிறுவனங்கள் மறுபுறம் அதிக விலைக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்வதாகவும், இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவெனவும் ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, தேயிலைச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அதேபோன்று தேயிலை தொழிற்துறையில் உள்ள பிரச்னைகள் குறித்து தொடர்ச்சியாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் ஜனாதிபதி கருத்துரைத்துள்ளார்.

அதற்கு அப்பால் செல்ல வேண்டுமாயின் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

எனவே, கடந்த அமைச்சரவை கூட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன் பெருந்தோட்ட அமைச்சர், நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதேபோன்று வேதனம் மாத்திரமின்றி பெருந்தோட்ட நிறுவனங்களின் வசமுள்ள சுகாதார நிலையங்கள், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறைகள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பல அமைச்சுகள் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி வெவ்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

(அ)

# வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 13

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலயவில் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலயவில் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு, கிழக்கு, மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மழையால் நிரம்பிய 42 நீர்த்தேக்கங்கள்!

கொழும்பு, மார்ச் 13

நாடு முழுவதும் உள்ள நீர்ப்பாசனத் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 73 முக்கிய நீர்த்தேக்கங்களில் 42 நீர்த்தேக்கங்கள் நேற்றுக் காலை 7.00 மணி நிலவரப்படி, கனமழை காரணமாக தற்போது நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் துறையின் கூற்றுப்படி, அவற்றில் அம்பாறை மாவட்டத்தில் ஏழு நீர்த்தேக்கங்களும், அனுராதபுரத்தில் ஆறும், பதுளையில் ஐந்தும், பொலனறுவையில் மூன்றும், திருகோணமலையில் மூன்றும் உள்ளன.

மின்னேரிய, கடுவலை, கந்தளாய், ராஜாங்கனை, லுணுகம்வெஹெர, சேனநாயக்க சமுத்திர, பராக்கிரம சமுத்திர ஆகிய முக்கிய நீர்த்தேக்கங்கள் கசிந்து வருவதாக திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ந்து நீர கசிவு ஏற்பட்ட போதிலும், நீர்த்தேக்கங்களில் மொத்த நீர் சேமிப்பு திறனில் தோராயமாக 93 வீதத்தை வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்டதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# தம்பகல்ல பிரதேசத்தில் பெண் எரித்துக் கொலை!

கொழும்பு, மார்ச் 13

தம்பகல்ல, கொலொன்கந்த பிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் 55 வயதுடைய பெண் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக தம்பகல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டுப் பின்னர் எரித்துக் கொலப்பட்டுள்ளார் எனவும், இச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் மகன், மகள் மற்றும், மருமகள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, உயிரிழந்த பெண்ணின் சடலம் மொனராகலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பகல்ல பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனா எம். பிக்கு எதிராக பிரேரணை கொண்டுவர நேரும்

### நிசாம் காரியப்பர் எம். பி.

கொழும்பு, மார்ச் 13

பிற இனத்தையும் மதத்தையும் அவமதிக்கும் வகையிலும் புண்படுத்தும் வகையிலும் பேசுவது தமிழர் பண்பாடல்ல. பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் செயல்பாடுகள் வருத்தத்துக்குரியன.


பதவிக் கான கௌரவத்தை அவர் பாதுகாத்துக் கொண்டு முறையற்ற வகையில் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் சிறப்பு பிரேரணையை கொண்டு வர நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் செயல்பாடுகள் தொடர்பில் குறிப்பிட வேண்டும். பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு எதனையும் பேச முடியாது.

பேசும் வார்த்தை யில் இனிமை இருக்க வேண் டும், வாய்மை மற்றும் சொல் வாண்மை இருத்தல் வேண்டும் - என்றார். (ஐ)

## கிழக்கு மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு!



மட்டக்களப்பு, மார்ச் 13

கிழக்கு மாகாணத்தின் அனைத்து மருத்துவமனைகளின் மருத்துவர்களும் நேற்று புதன்கிழமை தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் முன்னாள் சிப்பாய் ஒருவரால் பெண் மருத்துவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையை கண்டித்தும் - அவருக்கு நீதி கோரியுமே இந்தப் பணிப் புறக்கணிப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தால் சிகிச்சைக்காக வந்த பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மூதூரில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க வலியுறுத்தி போராட்டம்!




திருகோணமலை, மார்ச் 13

திருகோணமலை - மூதூர் - பாட்டாளிபுரம் பாமகள் வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொட்டும் மழைக்கு மத்தியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின்போது, "பாடசாலை வீழ்ச்சிக்கு அதிகாரிகளே பொறுப்பு", "கல்வியே எமது சமூகத்தின் மாற்றம்", "எமது பிள்ளை அரசின் பிள்ளை இல்லையா?", "என் கல்வி என் உரிமை", "கல்வி அதிகாரிகளின் அசமந்தப்போக்கு தடை செய்யப்பட வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தந்த மூதூர் வலயக் கல்வி பிரதி பணிப்பாளர் தேவதாஸ் ஜெயந்தன் பெற்றோருடன் பேச்சில் ஈடுபட்டதோடு இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

சுமார் 350இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாமகள் வித்தியாலயத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் சமயம் உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரியவருகிறது. (ஐ)

## மருத்துவருக்கு நீதி கோரி திருமலையில் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, மார்ச் 13

அநுராதபுரத்தில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண் மருத்துவருக்கு நீதி கோரியும் அவருக்கெதிராக இடம்பெற்ற குற்றச் செயலை கண்டித்தும் திருகோணமலை மாவட்ட மருத்துவமனையில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட மருத்துவர் கள் கறுப்புப் பட்டி அணிந்தும் பதாதைகளை ஏந் தியும், பாலியல் குற்றத்துக்கு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ஐ)

## மாணவர்கள் பயணித்த முச்சக்கரவண்டி விபத்து

மட்டக்களப்பு, மார்ச் 13

மாணவர்களை ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானது. எனினும், தெய்வாதீனமாக எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை. திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் மூதூர் - பச்சனூர் பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி சிறிய காயங்களுக்கு உள்ளானார். அத்துடன், முச்சக்கர வண்டியும் சேதமடைந்தது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## மதுபான பாவனையை எதிர்த்து காத்தான்குடியில் விழிப்புணர்வு

மட்டக்களப்பு, மார்ச் 13

மதுபான பாவனையால் பெண்களுக்கு ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை தெளிவூட்டும் ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது.

இதன் போது காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா முச்சக்கர வண்டிக்கு முதல் ஸ்ரிக்கரை ஒட்டி ஆரம்பித்து வைத்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. மதுபான, புகையிலை நிறுவனங்கள் இளைஞர்கள், சிறுவர்கள் மற்றும் பெண்களை இலக்கு வைத்து பல்வேறு நுணுக்கங்களை பயன்படுத்தி அவர்களை பாவனைக்கு எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

இந்தப் பொறிகளிலிருந்து பெண்களையும் எதிர்கால சந்ததியினரையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த ஸ்ரிக்கர் ஒட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### "இன, மதம் கடந்து அபிவிருத்தி செய்வோம்"

பொத்துவில், மார்ச் 13

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொத்துவில் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதிகப்படியான வாக்குகளால் கைப்பற்றும் என பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் ஏ. எம்.ஏ.தாஜுதீன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பொத்துவில் பிரதேசத்துக்கு பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுத் தந்தது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்பதை பொத்துவில் மக்கள் மறந்துவிட முடியாது. இவ்வாறு பொத்துவில் வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கட்சி ரீதியாக தெரிவு செய்து தந்த அகில இலங்கை மக்கள் காங்கிரசை ஆதரிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு பொத்துவில் பிரதேச மக்களுக்கு இருக்கிறது என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

பொத்துவில் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றுவதன் மூலம் இன,மத பேதங்களுக்கு அப்பால் இதை அபிவிருத்தி அடைந்த ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கு முயற்சிக்க முடியும் - என்றார். (ஐ)

## சிப்தொற புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கல்!

மட்டக்களப்பு, மார்ச் 13

காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி சிப்தொற புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதின்போது, உயர்தர பிரிவில் கல்வி பயிலும் 108 மாணவர்களுக்கு தலா 1,500 ரூபாய் வீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜூத் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ஐ)

## ஏறாவூர் நகர சபை வேட்பாளரை தெரிவதற்கான கூட்டம் நடந்தது



ஏறாவூர், மார்ச் 13

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபைக்கு கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத்தெரிவு செய்வது தொடர்பான கூட்டம் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி. தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ், பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஏறாவூர் நகர சபை தலைவருமான எம்.எஸ்.நளீம், பிரதேசத்தின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் முன்னாள் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக குழுவொன்றும் இதன்போது அமைக்கப்பட்டது. (ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பாகிஸ்தான் ரயில் கடத்தல்: 104 பணயக் கைதிகள் மீட்பு

## - 16 தீவிரவாதிகள், 30 படையினர் பலி -



இஸ்லாமாபாத், மார்ச் 14

**பாகிஸ்தான் ரயில் கடத்தல் சம்பவத்தில் 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 104 பணயக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.**

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ரயில் ஒன்றை தமது கட்டுப்பாட்டுக்குள் தீவிரவாதிகள் கொண்டுவந்தனர். இதையடுத்து, அதிலிருந்த 30 படையினரை சுட்டுக் கொன்றதுடன் 500 பொதுமக்களை பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

இந்தச் சம்பவத்தில் நேற்றைய நிலவரப்படி 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 104 பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்களில் 58 ஆண்கள், 31 பெண்கள், 15 சிறுவர்களாவர். மீட்கப்பட்டவர்கள் பலுகிஸ்தான் மாகாணத்தின் கச்சி மாவட்டத்தில் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை தொடர்ந்து வருவதாகத் தெரிய வருகின்றது.

தீவிரவாதிகளை கொன்று, அனைத்து பணயக் கைதிகளும் பத்திரமாக மீட்கப்படுவர் என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

# உக்ரைன் போர் நிறுத்தம் ரஷ்யாவும் சம்மதிக்கும்!

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், மார்ச் 13

"தற்காலிக போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் தயாராக உள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புடினும் இதற்கு சம்மதிப்பார் என நம்புகிறேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் அமெரிக்க பிரதிநிதிகளுடன் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆலோசனை மேற்கொண்டார். இந்தப் பேச்சுக்கு பின்னர் உக்ரைன் அரசு 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு தயாராக இருப்பதாகக் கூறியது. இதனைத் தொடர்ந்தே ட்ரம்பின் அறிக்கையும் வெளியாகியுள்ளது.

இந்தப் போர் நிறுத்தம் தொடர்பாக ட்ரம்ப் கூறுகையில்,"ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெறும் போரின் காரணமாக இரு தரப்பிலும் இராணுவத்தினர், பொதுமக்கள் என உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இது நிறுத்தப்பட வேண்டும். அதற்கு தற்காலிக போர் நிறுத்தம் மிகவும் அவசியம்.

இந்த போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக் கொண்டுள்ளது.

ரஷ்யாவும் ஒப்புக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். இந்த போர் நிறுத்த அவசியத்தை உணர்ந்து ரஷ்யா அதனை ஏற்கும்படி நம்மால் செய்ய முடிந்தால் அது மிகப்பெரிய விஷயம். ஒரு வேளை அப்படிச் செய்ய முடியாமல் போனால், இன்னும் நிறைய மக்கள் கொல்லப்படுவார்கள்" - என்றார்.

மூன்று ஆண்டுகளாக நீடிக்கும் போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்யாவுடன் உடனடியாக பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டு:

# முன்னாள் ஜனாதிபதியை கைது செய்தது பிலிப்பைன்ஸ்!



மணிலா, மார்ச் 13

மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டில் பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி றொட்ரிகோ டுட்டெர்டே அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

2016-22 காலகட்டத்தில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக இருந்த றொட்ரிகோ டுட்டெர்டே, நாட்டில் போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டார் என்று குற்றம்சாட்டப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்து வரும் நிலையில் அவரை கைது செய்ய பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, றொட்ரிகோ டுட்டெர்டே மணிலாவின் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் பிலிப்பைன்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

(ஐ)

# இந்தியாவில் பிரபலமாகி வரும் மயான ஹோலி கொண்டாட்டம்!

புதுடில்லி, மார்ச் 13

உத்தரப் பிரதேசம் வாரணாசியில் துறவிகளால் கொண்டாப்படும் மயான ஹோலி பிரபலமாகி வருகிறது. மணிகன்கா காட்டில் நடைபெற்ற இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் அகோரி, நாகா துறவிகளுடன் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களும் இணைந்து ஹோலி கொண்டாடினர்.



இந்தியாவின் வட மாநிலங்களை நாளை கொண்டாடப்படவுள்ள ஹோலி பண் டிகை மிகவும் முக்கியமானது. இது ஒரு வாரம் முதல் 10 நாட் கள் வரை ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையாக முன்கூட்டியே தொடங்குகிறது. இந்த வகையில், திங்கள்கிழமை வந்த ரங்பர்னி ஏகாதசி தினத்தன்று உத்தரப் பிரதேசத்தில் ஹோலி கொண்டாட்டம் ஆரம்பமானது. இதற்கு அந்த நாளில்தான் இங்குள்ள பழம்பெரும் காசி விஸ்வநாதர் கோயிலில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக நம்பிக்கை உள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் இதற்கும் இரண்டு நாள் முன்னதாக மதுராவில் லாட்மார் (தடியடி) ஹோலி தொடங்கி விட்டது. இதை மாநிலத்தின் முதல்வர் யோகி ஆதித்யநாத் துவக்கி வைத்திருந்தார்.

ரங்பர்கி ஏகாத சியில், வாரணாசியின் இரு பெரும் மயானங்களில் துறவி களால் ஹோலி கொண்டாடும் வழக்கம் தொடங்கி விட்டது. இந்த வகை ஹோலி நாகா மற்றும் அகோரி துறவிகளால் கடந்த 10 ஆண்டுகளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த ஹோலி பண்டிகையில் எரிந்த உடல்களின் சாம்பலை ஒருவர் மீது ஒருவர் பூசியும் தூவியும் கொண்டாடுகின்றனர். சில அகோரிகள் சுடு சாம்பலையும் அள்ளித் தம்மீது பூசுகிறார்கள். (ஐ)

# காசாவில் தாக்குதல் 4 பலஸ்தீனர்கள் பலி!

டெல் அவிவ், மார்ச் 13

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்துள்ளனர்.

முதல்கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்த சூழலில், இரண்டாவது கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றிய பேச்சைத் தொடங்குவதற்கு ஹமாஸ் அமைப்பு விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனிடையே, காசா பகுதிக்கான நிவாரணம் வழங்கலையும் இஸ்ரேல் தடுத்து நிறுத்தியுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 2023 ஒக்ரோபர் 7ஆம் ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில், 1057 பேர் உயிரிழந்தனர். பலர் கடத்தப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் பலஸ்தீனம் மீது படையெடுத்தது. இதில், 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகள் போக இன்னமும் 24 பணயக் கைதிகள் உயிருடன் ஹமாஸின் பிடியில் உள்ளனர். 35இற்கும் மேற்பட்டவர்களின் இறந்த உடல்களும் உள்ளன என்று கூறப்படுகிறது.

(ஐ)



பிரேசிலின் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் புகழ்பெற்ற சம்பா கொண்டாட்டத்தில் இடம் பெற்ற அணிவகுப்பு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் பிறீமியர் லீக் ரி - 20: பெங்காளூரு ஆறுதல் வெற்றி!



பெங்களூரு, மார்ச் 13


11 ஓட்டங்களால் மும்பை அணியை வீழ்த்தி பெங்களூரு அணி ஆறுதல் வெற்றியை பதிவு செய்தது.

மகளிர் பிறீமியர் லீக் தொடரில் நேற்று நடந்த 20ஆவது லீக் போட்டி மும்பை இந்தியன்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர். சி. பி) அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை பந்துவீச்சை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர். சி. பி. 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்கள் எடுத்தது. அதிக பட்சமாக ஸ்மிருதி மந்தனா 53, ரிச்சா கோஷ் 36, பெர்ரி 49 ஓட்டங்கள் அடித்தனர்.

இதையடுத்து 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி மும்பை களமிறங்கியது. இறுதியில் மும்பை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் களை இழந்து 188 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் ஆர். சி. பி. அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தி வெற்றியைப் பதிவுசெய்தது.

## டில்லி கப்பிட்டல்ஸின் தலைமை பதவியை மறுத்த கே. எல். ராகுல்!



புதுடில்லி, மார்ச் 14


ஐ. பி. எல். தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் பதவியை வேண்டாம் என மறுத்துள்ளார் கே. எல். ராகுல். இதனால் அக்சர் பட்டேல் அணித் தலைவராக நியமிக்கப்படுவது உறுதியாகி உள்ளது.

ஐ. பி. எல். ரி-20 தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்தத் தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி மட்டுமே தலைவரை அறிவிக்கவில்லை. இந்த அணியின் தலைவராக கே. எல். ராகுல் நியமிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க் கப்பட்டது. இதனை கருத்தில்கொண்டே அவர் 14 கோடி (இந்திய) ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில், கே. எல். ராகுல் தலைமை பதவியை மறுத்விட்டார் என்று தெரிய வந்துள்ளது.

இதனிடையே, ராகுலின் மனைவி குழந்தை பிரசவிக்கவுள்ளார். இதனால், அவர் ஆரம்பப் போட்டிகள் சிலவற்றை தவிர்க்கவுள்ளார் என்றும் கூறப்படுகிறது. இதனால், டில்லி அணியின் தலைவராக அக்சர் பட்டேல் நியமிக்கப்படவுள்ளார். (ஐ)

## சிக்ஸர் மழை பொழிந்து வில்லியர்ஸ் அபார சதம்!




கேப்டவுன், மார்ச் 13

28 பந்துகளில் 15 சிக்ஸர்களை விளாசி சதமடித்து அசத்தியுள்ளார் தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் ஏபி டி வில்லியர்ஸ்.

தென்னாபிரிக்காவில் ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்கள் விளையாடும் லெஜண்ட்ஸ் லீக் நடக்கிறது. இதில், ஏபி டி வில்லியர்ஸ் டைட்டன்ஸ் அணிக்காக விளையாடினார்.

இதில், புல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கிய வில்லியர்ஸ் ஆரம்பம் முதலே அதிரடி காட்டினார். 28 பந்துகளில் 15 சிக்ஸர்களை விளாசி சதமடித்தார்.இதன் மூலம் டைட்டன்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 278 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய புல்ஸ் அணி 14 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது போட்டி மழையால் தடைப்பட்டது.டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி டைட்டன்ஸ் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்:

## இறுதியில் இந்தியா இல்லை 128 கோடி ரூபாய் இழப்பு!




லண்டன், மார்ச் 13


ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்திய அணி தகுதி பெறாததால் ரிக்கெற் வருவாயில் சுமார் 128 கோடி (இலங்கை) ரூபாய் இழப்பை ஐ. சி. சி. சந்திக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி எதிர்வரும் ஜூன் 11 முதல் 15ஆம் திகதி வரை லண்டனில் உள்ள புகழ்பெற்ற லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணி, புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பிடித்த தென்னாபிரிக்காவுடன் பலப்பரீட்சை நடத்த உள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி "கிரிக்கெட்டின் தாயகம்" என அழைக்கப்படும் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது இதுவே முதன்முறையாகும். இந்நிலையில் இறுதிப்போட்டிக்கு இந்திய அணி தகுதிபெற தவறியதால் போட்டி அமைப்பாளர்கள் சுமார் நான்கு மில்லியன் பவுண்ஸ்கள் (ரூ. 128 கோடி) வருவாயை இழக்கக்கூடும் என தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்திய அணி எப்படியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுவிடும் இதனால் இந்திய ரசிகர்கள் மத்தியில் டிக்கெட்கள் வாங்குவதற்கு அதிக ஆர்வம் இருக்கும் என்ற எண்ணத்தில் போட்டி அமைப்பாளர்கள் முதலில் ரிக்கெற்களை பிரீமியம் விகிதத்தில் விலை நிர்ணயம் செய்திருந்தனர். ஆனால், இந்திய அணி இறுதிப் போட் டிக்கு தகுதி பெறாததால் மேரில்போன் கிரிக்கெட் கிளப் (எம். சி. சி.) வருவாய் இழப்பை சந்திக்க உள்ளது மைதானத்துக்கு அதிக ரசிகர்களை இழுக்கும் விதமாக ரிக்கெற் விலையை வெகுவாக குறைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் ஸ்வியாரெக் அடுத்த சுற்றில்!



கலிபோர்னியா, மார்ச் 13

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாரெக் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இண்டியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடக்கிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில்,

செக் குடியரசின் கரோலினா முச்கோவா போலந்தின் இகா ஸ்வியாரெக் ஆகியோர் மோதினர். இதில், இகா ஸ்வியாரெக் 6 -1, 6 -1 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

## 2027 உலகக் கிண்ணத்தில் ஆட ரோஹித்துக்கு விருப்பம்!

### றிக்கி பொண்டிங் கருத்து

சிட்னி, மார்ச் 13

இந்நிலையில், 2027ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் விளையாட ரோஹித் சர்மா விரும்புகிறார் என்று அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் றிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் மேலும் கூறுகை யில், "ரோஹித் தலைமையில், இருபது - 20 உலகக் கிண்ணம், சம்பியன்ஸ் கிண்ணம் வென்றுள்ள நிலையில் ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான உலகக் கிண்ணத்தை ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி வெல்லவில்லை. எனவே, 2027ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் வெற்றிபெற்று கிண்ணத்தை கைப்பற்ற வேண்டும் என்று நினைத்து ரோஹித் சர்மா தனது ஓய்வு முடிவை அறிவிக்கவில்லை" - என்றார்.

முன்னதாக, சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்றதும் ரோஹித் சர்மா ஓய்வு பெறுவார் என்று கூறப்பட்டது. ஆனால், தான் ஓய்வு பெறப் போவதில்லை என்று ரோஹித் சர்மா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இரவு - பகல் ஆட்டமாக நடக்கவுள்ள ஆஸி. - இங்கிலாந்து டெஸ்ட் போட்டி!

சிட்னி, மார்ச் 13

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகள் இடையே முதன்முறையாக கடந்த 1887ஆம் ஆண்டு சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் இரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் 150ஆவது வருட கொண்டாட்டத்தையொட்டி பகல் - இரவு டெஸ்ட் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி வரும் 2027 மார்ச் 11 முதல் 15ஆம் திகதி வரை மெல்பர்ன் மைதானத்தில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் பிங்க் பந்து போட்டியில் விளையாடும் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் மருத்துவர்...

கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தன்னை கட்டியிருந்த கட்டுகளை பெரும் போராட்டத்தின் பின்னர் அவிழ்த்த மருத்துவர் இரவு 11 மணியளவில் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மருத்துவமனைக்குள் நிகழ்ந்த இந்தச் சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து, இந்த சம்பவம் தொடர்பில் விசாரிக்க 5 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன. சந்தேக நபர் திருடிச் சென்ற கைபேசியை பயன்படுத்தி அவரின் இருப்பிடத்தை அறிந்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர். (ஐ)

## பணிப் புறக்...

அதிகாரிகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளின் மருத்துவர்களும் ஆதரவு தெரிவித்திருந்தன. இதனால், நாடு முழுவதும் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகள் இயங்கவில்லை.

இதனால், நேற்றைய தினம் மருத்துவமனைகளுக்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது திரும்பிச் சென்றனர். இவர்களில், வயதானவர்கள் - வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் அதிக நெருக்கடியையும் - வீண் அலைச்சல் மற்றும் பண விரயத்தையும் எதிர்கொண்டனர். (ஐ)

## விபத்தில்...

உயிரிழந்தார்.

கடந்த 8ஆம் திகதி வீதியில் நின்றிருந்த முதியவரை பாண் பெட்டியுடன் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இதில், முதியவர் படு காயமடைந்தார். முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணையை ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## நாளை...

மருத்துவமனை, சிறுவர் மருத்துவ மனை புற்றுநோய் மருத்துவமனை போன்றவை வழமைபோன்று இயங்கும். மேலும், சகல மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவுகளும் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பணிப்புறக்கணிப்பு தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

"அநுராதபுரம் மருத்துவமனையில் பெண் மருத்துவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டமை சமூகத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவமனைகளில் பணிபுரியும் பெண் மருத்துவர்களின் பாதுகாப்பு குறித்து நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே நான் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தோம். சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டாலும் அரசாங்கத் துக்கு எமது செய்தியை மிக அழுத்தமாகக் கூற வேண்டியுள்ளது. அதனால் வெள்ளிக்கிழமை காலை 08 மணி வரை எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இதில் எந்தவித மான அரசியல் பின்புலமும் கிடையாது. மருத்துவர் ஒருவருக்கு மாத்திரம் நிகழ்ந்த சம்பவமாக இதனை நாம் பார்க்கவில்லை. முழு சமூகமும் எதிர் காலத்தில் பாதிப்பை எதிர்நோக்கலாம். ஆதலால் இந்த விடயத்தில் அரசாங்கத் தின் உடனடி தலையீடு அவசியமாகும்", என்று சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்தார். (ஐ)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

## யாழ்...

இதனால், மருத்துவமனைகளுக்கு வந்த பல ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் சிகிச்சை பெறமுடியாது பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் முன்னாள் சிப்பாய் ஒருவரால் பெண் மருத்துவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். இதனைக் கண்டித்தும் - அவருக்கு நீதி கோரியும் நேற்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் நாடு முழுவதுமுள்ள அரச மருத்துவமனைகளின் மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே. (ஐ)

## ராஜிதவுக்கு...

சிறி கொத்தாவில் புதன்கிழமை தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது இரு தொகுதி அமைப்பாளர்கள் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்பில் கூறிய போது ரணில் விக்கிரமசிங்க கோப மாக அவர்களுக்கு பதிலளித்துள்ளார்.

தொகுதி அமைப்பாளர் ஒருவருக்கு நியமன கடிதத்தை வழங்கியபோது அவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பேச முயற்சித்த போதிலும், அவர் அதனை கவனத்தில் கொள்ளவில்லை. "ராஜித சேனாரத்ன வரமுன்னர் நாம் தனியாகவே அனைத்து பணிகளையும் முன்னெடுத் தோம். தற்போது அவருக்கு மாத்திரம் முன்னுரிமையளிப்பது தவறாகும்." என குறித்த தொகுதி அமைப்பாளர் கூறினார். எவ்வாறிருப்பினும் அதற்கு பதிலளிக்காத ரணில், அவரை சென்று அமருமாறு கூறினார்.

எனினும் அங்கு அமர்ந்திருந்த மேலும் இருவர் எழுந்து, கருத்துகளை தெரிவிக்க முயற்சித்த போதிலும், அவர்களையும் அமருமாறு ரணில் கூறினார். அவர்கள் தொடர்ந்தும் பேச முயற்சித்தமையால் சற்று கடுந்தொனியில், "அமருமாறு கூறினால் தயவு செய்து அமருங்கள்" என்று மீண்டும் மீண்டும் கூறினார். இதன்போது ஐ. தே. க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன அவர்களின் அருகில் சென்று அவர்களை சமாதானப்படுத்த முயற்சித்தார். எனினும் அவர்கள் அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சட்டத்துக்கு...

மேலும் குறிப்பிடுகையில்,

19ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் கட்டுப்பணம் செலுத்தும் காலம் நிறைவடையவுள்ளது. தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வேட்புமனு தாக்கல் செய்யவுள்ள சகல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களிடம் சட்டத்தின் 28ஆவது உறுப்புரைக்கமைய அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வேட்புமனுக்களை இரத்து செய்வது எமது நோக்கமல்ல. தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனில், வேட்மனுக்கள் அதற்கேற்றவாறு தவறுகள் இன்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதேபோன்று 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம், 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், வேட்பாளர்களின் சொத்து மதிப்பு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதும் கட்டாயமாகும். இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களிடம் கேட்டுக் கொள்கிறோம். தேர்தலின் போது வாக்காளர்களை போன்று வேட்பாளர்களுக்கும் ஜனநாயகப் பொறுப்பு காணப்படுகிறது என்பதால் அதற்கேற்ப செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் - என்றார். (ஐ)

# பொருளாதார மீட்சியை தக்கவைக்க கட்டமைப்பு மறுசீரமைப்பு அவசியம்!

### மத்திய வங்கி முன்னாள் ஆளுநர்

கொழும்பு, மார்ச் 13

நாட்டின் தற்போதைய பெரும்பாக பொருளாதார மீட்சியைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கு கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளில் வலுவாக அவதானம் செலுத்துமாறும், அவற்றைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறும் சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியுதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி மக்களைத் திருப்திப்படுத்தக் கூடியவாறான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் கலாசாரத்தை இலங்கை கொண்டிருப்பதால் அது மீண்டும் பொருளாதார ஸ்திரமின்மை நெருக்கடிக்குள் விழக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் எச்சரித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றிய இந்திரஜித் குமாரசுவாமி, நீண்டகாலமாக ஆட்சிபீடமேறிவரும் அரசாங்கங்களின் தேர்தலுக்கு முன்னரான செலவினங்கள் மற்றும் அவை நாணயக்கொள்கைக்கு அப்பால் நிதியியல் நடவடிக்கைகளில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் குறித்து விளக்கமளித்ததுடன், அவை நாட்டின் பணவீக்க மற்றும் கையிருப்பு நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகவும் விசனம் வெளியிட்டார். அத்துடன், இந்நடவடிக்கைகள் இலங்கையை மொத்தமாக 17 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எது எவ்வாறிருப்பினும் பொருளாதார நெருக்கடியின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயல்திட்டத்துக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட துடிப்பான மறுசீரமைப்புகள், தற்போது இலங்கையில் புதியதொரு பெரும்பாக பொருளாதார நிர்வாகக்கட்டமைப்பு தோற்றம்பெற வழிவகுத்திருக்கிறது என்றும் இந்திரஜித் குமாரசுவாமி சுட்டிக்காட்டினார்.





கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருவிழா நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## போதைப் பொருளுக்கு...

பயன்படுத்தக்கூடிய 150 வகையான பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் பயன்பாடும் அதிகரித்து வருகிறது. புற்றுநோயாளர்கள் மற்றும் வலி நிவாரணிகளுக்கு பரிந்துரைக்கப்படும் இந்த மருந்துகளை போதைக்கு அடிமையானவர்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதும் அதிகரித்து வருகிறது.

பெரியவர்கள் மட்டுமல்ல பாடசாலை சிறுவர்கள் மற்றும் இளைஞர்களும் போதைப்பொருள் பாவனைக்குப் பலியாகின்றனர். குறிப்பாக 15 முதல் 17 வயதுக்கு உட்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர்.

2024ஆம் ஆண்டில் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட ஒரு இலட்சத்து 62 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்தனர். 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி 92 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் பேர் வரை போதைக்கு அடிமையானவர்கள் இருக்கின்றனர். தவிர, 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரையில் ஹெரோயினுக்கும் அதே எண்ணிக்கைக்கு சமமானவர்கள் கஞ்சாவுக்கும் அடியாகியுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் போதைப் பொருளுக்கு அடிமையான வர்கள் தொடர்பில் புதிய கணக்கெடுப்பை நடத்த தேசிய ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தயாராகி வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 20ஆயிரம்...

தடுப்பு கைதிகள்.

தடுப்பிலுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேநேரம், தற்போது 3,718 ஆண் சிறைக் காவலர்கள் உள்ளனர். 729 காவலர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இதேபோன்று, 477 பெண் சிறைக் காவலர்கள் உள்ளனர். 117 பேர் பற்றாக்குறையாக உள்ளனர் என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# போலி இலக்கத்தகட்டுடன் 267 கார்கள் அடையாளம்!

கொழும்பு, மார்ச் 13

நகரங்களில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கேமராக்கள் மூலம் போக்குவரத்து விதிகளை மீறிய கார்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டதில் போலி இலக்கத்தகடுகளை பயன்படுத்திய 267 கார்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்படும், போக்குவரத்து விதிகளை மீறிய கார்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், போலி இலக்கத் தகடுகளுடன் சென்ற கார்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு வழங்காவிட்டால் போராட்டம்

## நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 13

**எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அந்த ஒன்றியத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக எமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து நாம் சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவுடன் கலந்துரையாடல் நடத்தினோம். எமது சம்பள முரண்பாட்டை நீக்குமாறு வலியுறுத்தினோம்.

ஒருவார காலத்துக்குள் தீர்வை வழங்குவதாக அவர் எழுத்துமூலம் அறிவித்துள்ளார். அந்தக் கடிதத்தை நாம் வெளியிடவில்லை. அமைச்சராக பொறுப்பேற்று அவர் வழங்கிய முதலாவது வாக்குறுதி என்பதால் பொறுமையாக இருக்கிறோம்.

சம்பள உயர்வு வழங்குவதாகக் கூறி கொடுப்பனவுகளை நிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறோம்-என்றார். (அ)

# அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்குக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலர் கெவின் பிரைஸ் தலைமையிலான குழுவினர் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடினர்.

அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அலுவலர் கெவின் பிரைஸ், அரசியல் நிபுணர்களான நஸ்றின் மரிக்கார் மற்றும் சரித்த பெர்ணாண்டோ ஆகியோரே நேற்று நண்பகல் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தனர்.

துணைவேந்தரைச் சந்தித்து வடக்கு நிலைமைகளைக் கேட்டறிந்த தூதரகக் குழுவினர், தொடர்ந்து பீடாதிபதிகள் மற்றும் அலுவலர்களுடன் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர் மற்றும் பீடாதிபதிகள் கலந்து கொண்டனர்.

11 ஆம் திகதி முதல் இன்று வரை வடக்குக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கத் தூதரகக் குழுவினர் காங்கேசன்துறையில் அமைந்துள்ள துறைமுகங்கள் அதிகார சபையின் வதிவிட முகாமையாளர் மற்றும் இலங்கைக் கடற்படையின் வடபிராந்திய அதிகாரிகளுடனும், மன்னாரில் அமைந்துள்ள வலுசக்தி அமைச்சின் காற்றாலை மின்னுற்பத்தி செயற்றிட்ட அதிகாரிகளையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரையும் சந்தித்துக் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)



# சகல பாடசாலைகளும் நாளையுடன் விடுமுறை

கொழும்பு, மார்ச் 13

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் (சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள்) இவ்வாண்டுக்கான முதலாம் தவணையின் முதலாம் கட்டம் நாளை வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது. அதற்கமைய முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2024 கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை 3663 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இம்முறை 474,147 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபால்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

# இந்திய ஆசிரியர்களை அழைத்துவர அரசாங்கத்திடம் நான் கோரவில்லை!

## சபையில் கூறினார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, மார்ச் 13



"இந்திய ஆசிரியர்களை அழைத்துவர வேண் டும் என அரசாங்கத்திடம் நான் கோரிக்கை விடுத்தேன் என வெளியான செய்தியில் உண்மை இல்லை." என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்திய ஆசிரியர்களை அழைத்துவர வேண்டும் என நான் கூறவில்லை. 2017 ஆம் ஆண்டு இந்திய ஆசிரியர்களை அழைத்து வருவதற்கு முயற்சித்தவேளை ஜே.வி.பியினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் நாம் அதனை செய்யவில்லை என்றே குறிப்பிட்டிருந்தேன்.

எனினும், நான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தாக விடயத்தை மாற்றி எழுதியுள்ளனர். இது தவறு.

இந்த விடயத்தை வைத்துக்கொண்டு சமூக வலைத்தளங்களில் எனக்கு எதிராக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விடயத்துடன் எனக்கு தொடர்பு இல்லை - என்றார். (அ)

# தேசபந்து தென்னக்கோனின் ரிட் மனு தீர்ப்பு மார்ச் 17 இல்!

கொழும்பு, மார்ச் 13

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தன்னைக் கைது செய்யுமாறு நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி வழங்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தன்னைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கு தென்னங்கன்று

கொழும்பு, மார்ச் 13

குறைந்த வருமானம் பெறும் 200,000 குடும்பங்களுக்கு இலவச தென்னங்கன்றுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒரு குடும்பத்திற்கு 02 தென்னங்கன்றுகள் என்ற அடிப்படையில் 400,000 இலட்சம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக தெங்கு பயிர்ச் செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்தார். மேலும் இந்த வருடம் 25 லட்சம் தென்னங் கன்று களை நடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# பயணிகள், பணிப்பெண்கள் மீது விமானத்தில் பாலியல் சீண்டல்!

## யாழ்.வாசி கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, மார்ச் 13

இந்தியாவின் மும்பை நகரத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த விமானத்தில் இருந்த விமானப் பயணிகள் மற்றும் பணிப்பெண்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கை மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் இரட்டைக் குடியுரிமையை பெற்ற 65 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் ஊடாக இந்தியாவின் மும்பை நகரத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த நிலையில் விமானத்துக்குள் அதிகளவு மதுபானம் அருந்தியுள்ளார்.

பின்னர் சந்தேக நபர் விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் பணிப்பெண்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார்.

இதனையடுத்து, விமானப் பணியாளர்கள் இது குறித்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு தகவல் அளித்துள்ளனர்.

பின்னர் இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதும், சிறிலங்கன் எயார் லைன்ஸ் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். மேலும், சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org